# PRIMARY SCHOOL
# SEMESTRAL ASSESSMENT 2 (       )

## TAMIL LANGUAGE

### கட்டுரை (தாள் 1)

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது . படத்தின் அடியில் கொடுக்கப்பட்டுள்ள உதவிச் சொற்களை நீ கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள் .




பிறந்தநாளுக்காக
மலர்க்கொத்து
சந்தைக்கு
அழு குரல்
திரும்பிப்பார்த்தாள்

அம்மாவைக் காணவில்லை
தேடினார்கள்
காய்கறிக்கடைக்காரர்
சுட்டிக்காட்டினார்
அணைத்துக்கொண்டார்

# PRIMARY SCHOOL

## SECOND SEMESTRAL ASSESSMENT 2 - 2013

## TAMIL LANGUAGE

## PAPER 2

## PRIMARY 3

பெயர்: ______________________

வகுப்பு: ______________________

தேதி: ______________________

பெற்றோர் கையொப்பம்: ______________________

**வேற்றுமை உருபுகள்**

<u>கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.</u>

( 5 மதிப்பெண்கள் )

1. மாறனின் பந்து ______________ விழுந்தது.

   1) பள்ளத்தை  2) பள்ளத்தால்
   3) பள்ளத்தின்  4) பள்ளத்தில்  (   )

2. நாங்கள் ______________ வெளியே வந்தோம்.

   1) கடையிலிருந்து  2) கடையில்
   3) கடையோடு  4) கடையை  (   )

3. கவிதா வீட்டுப்பாடத்தை ______________ கொடுத்தாள்.

   1) ஆசிரியரிடம்  2) ஆசிரியரை
   3) ஆசிரியரோடு  4) ஆசிரியருடன்  (   )

4. புலி ______________ துரத்திச் சென்றது.

   1) மானின்  2) மானை
   3) மானிடம்  4) மானால்  (   )

5. கண்ணன் ராமுவுடன் ______________ சென்றான்.

   1) கடற்கரையில்  2) கடற்கரையோடு
   3) கடற்கரைக்கு  4) கடற்கரையை  (   )

/ 5

**மூவிடப் பெயர்கள்**

<u>கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.</u>

( 5 மதிப்பெண்கள் )

6. நீங்கள் அடுத்த வாரம் பறவைப் பூங்காவுக்குச் __________.

1) செல்வீர் 2) செல்வார்கள்
3) செல்வீர்கள் 4) செல்வோம் ( )

7. ஆமையும் முயலும் பந்தயத்தில் ______________.

1) ஓடியது 2) ஓடினீர்கள்
3) ஓடினர் 4) ஓடின ( )

8. நாங்கள் புத்தகங்களை __________.

1) அடுக் கினோம் 2) அடுக் கினார்கள்
3) அடுக்கினீர்கள் 4) அடுக்கினாய் ( )

9. கமலாவும் சீதாவும் பூங்காவில் ஊஞ்சல் ____________.

1) ஆடினாள் 2) ஆடின
3) ஆடினார் 4) ஆடினார்கள் ( )

10. நீ வீட்டுக்குச் சாயம் ___________.

1) பூசினாள் 2) பூசினேன்
3) பூசினான் 4) பூசினாய் ( )

11. எலியைக் கண்ட பூனை அதை ______________.

1) துரத்தின	2) துரத்தியது
3) துரத்தி	துரத்தின	(    )

12. மாலதி தன் அக்காவுடன் கடைக்கு ________________.

1) சென்றாள்	2) சென்றோம்
3) சென்றார்	4) சென்றாய்	(    )

7

**செய்யுள்**

<u>கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான செய்யுளைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.</u>
( 5 மதிப்பெண்கள் )

13. __________ கைவிடேல்.

1) உடையது
2) ஊக்கமது
3) ஓதுவது
4) ஈவது
( )

14. ஓதுவது __________.

1) ஒழியேல்
2) விளக்கேல்
3) இகழேல்
4) விளம்பேல்
( )

15. வைகறை __________ எழு.

1) காலை
2) தூக்கம்
3) உறக்கம்
4) துயில்
( )

16. __________ விலக்கேல்.

1) ஊக்கமது
2) ஈவது
3) இயல்வது
4) உடையது
( )

17. ஒப்புரவு __________.

1) ஒழுகு
2) பேசேல்
3) விரும்பு
4) ஒழியேல்
( )

/ 5

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

கீழ்வரும் விளக்கப்படத்தைக் கவனமாகப் படி: ( 5 **மதிப்பெண்கள்** )

# சிறுவர்களுக்கான நீச்சல் வகுப்பு

- **நீந்த கற்று கொள்ள விரும்புகிறீர்களா?**
- **1 வார நீச்சல் வகுப்பில் கலந்து கொள்ள வாருங்கள்**




நாள் : மார்ச் 13 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை

நேரம்: நாள்தோறும் 4.00 மணி முதல் 5.00 மணி வரை


இடம்: தோபாயோ நீச்சல் குளம்

கட்டணம்: $150



பயிற்சிக்காக மிதவைகள் வழங்கப்படும்

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்பவர்களுக்கு நினைவு சின்னங்கள் கொடுக்கப்படும்



சரியான விடையின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது:

18. இந்த நீச்சல் வகுப்பு யாருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

(1) இளைஞர்களுக்கு
(2) சிறுவர்களுக்கு
(3) பெரியவர்களுக்கு
(4) குழந்தைகளுக்கு ( )

19. நீச்சல் பயிற்சி வகுப்பு எத்தனை நாள்களுக்கு நடக்கும்?

(1) 6 நாள்களுக்கு
(2) 7 நாள்களுக்கு
(3) 13 நாள்களுக்கு
(4) 19 நாள்களுக்கு (

20. நீச்சல் பயிற்சி வகுப்பு எங்கே நடைபெறுகிறது?

(1) அங் மோ கியோ நீச்சல் குளம்
(2) பீஷான் நீச்சல் குளம்
(3) மாசிலிங் நீச்சல் குளம்
(4) தோபாயோ நீச்சல் குளம் ( )

21. நீச்சல் பயிற்சி வகுப்பு எத்தனை மணிக்குத் ஆரம்பாமாகும்?

(1) 5.00 மணிக்கு

(2) 6.00 மணிக்கு

(3) 4.00 மணிக்கு

(4) 1.00 மணிக்கு ( )

22. யாருக்கு நினைவு சின்னங்கள் வழங்கப்படுகின்றன?

(1) நீச்சல் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்பவர்களுக்கு

(2) நீச்சல் பயிற்சி வகுப்பில் கலந்து வெற்றி பெறுபவர்களுக்கு

(3) நீச்சல் கற்று தருபவர்களுக்கு

(4) நீச்சல் குளத்தில் வேலை செய்பவர்களுக்கு ( )

5

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையின் எண்ணைத் தேர்ந்தெடுத்து அடைப்பில் எழுது. (10 மதிப்பெண்கள் )

ஒரு காட்டில் புறாக்கூட்டம் வசித்து வந்தது. அந்தப் பக்கமாகப் பருந்து ஒன்று ________( )________ (23). அது புறாக்ககளைக் கண்டது. ஏதாவது ஒரு புறா ________( )________ (24) வருவதற்காக அது காத்திருந்தது. ஆனால், ________( )________ (25) நேரம் ஆகியும் ஒன்றுகூட வரவில்லை. பருந்து ஒரு ________( )________ (26) செய்தது. அது புறாக்களிடம் சென்று, "என்னைப் போன்ற பெரிய ________( )________ (27) உள்ள ஒருவர் உங்களுக்குத் தலைவனாக இருந்தால் ஆபத்து ஏற்படாது," என்று கூறியது. புறாக்களும் அதை கேட்டு ஏமாந்து போயின. பருந்தைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தன.

அதன் பிறகு என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

| | | |
|---|---|---|
| 1. தந்திரம் | 2. பலம் | 3. கூட்டத்தோடு |
| 4. அழகு | 5. மந்திரம் | |
| 6. நீண்ட | 7. தனியாக | 8. வந்தது |

/10

## சுயவிடைக் கருத்தறிதல்

கீழ்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடையைக் கோட்டில் எழுது.(10 மதிப்பெண்கள் )

ஒரு பெரிய ஆலமரத்தின் கிளையில் ஓர் ஆண் குருவியும் பெண் குருவியும் கூடு கட்டி **வசித்து** வந்தன. பெண் குருவி கூட்டில் முட்டைகளை இட்டு வைத்திருந்தது.

ஒருநாள் பகல் நேரத்தில் அந்தப் பக்கமாக ஒரு யானை வந்தது. **சோர்வாக** இருந்ததால் நிழலுக்காக அது ஆலமரத்தின் அடியில் நின்றது. யானை விளையாட்டுத்தனமாகத் தனது தும்பிக்கையைத் தூக்கியது. பிறகு மரத்தில் உள்ள கிளைகளை எல்லாம் தும்பிக்கையால் ஒடித்துக் கீழே போட்டது.

அப்போது கூடு இருந்த கிளையும் கீழே விழுந்தது. அதில் இருந்த முட்டைகள் எல்லாம் உடைந்தன. ஆனால், குருவிகள் இரண்டும் தப்பித்துக் கொண்டன.

பெண் குருவி அழத் **தொடங்கியது**. அதன் அழுகையைக் கண்டு ஆண்குருவி அதற்கு ஆறுதல் கூறியது.

கேள்விகள்:

28. குருவிகள் கூட்டை எங்கே கட்டின?

________________________________________

________________________________________

________________________________________

29. யானை ஏன் ஆலமரத்தின் அடியில் நின்றது?

30. யானை தன் தும்பிக்கையை வைத்து என்ன செய்தது?

31. முட்டைகள் எப்படி உடைந்தன?

32. பெண்குருவியின் அழுகையைக் கேட்ட ஆண்குருவி என்ன செய்தது?

10

**சொற்பொருள்**

கோடிட்ட சொல்லுக்கு ஏற்ற அதே பொருள் கொண்ட சொல்லைத் தேர்நதெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது: (3 மதிப்பெண்கள்)

33. ஓர் ஆண் குருவியும் பெண் குருவியும் கூடு கட்டி **வசித்து** வந்தன.

1. சேர்ந்து
2. பறந்து
3. வாழ்ந்து
4. படுத்து ( )

34. **சோர்வாக** இருந்ததால் நிழலுக்காக யானை ஆலமரத்தின் அடியில் நின்றது.

1. களைப்பாக
2. தாகமாக
3. நோயாக
4. ஆத்திரமாக ( )

35. பெண் குருவி அழத் **தொடங்கியது.**

1. நினைத்தது
2. ஆரம்பித்தது
3. சொன்னது
4. தயங்கியது ( )

----முற்றும்----

CA - 2

# P3
# TESTPAPER 9

மாறனின் ...

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 4 | 2) 1 | 3) 1 | 4) 2 | 5) 3 |
| 6) 3 | 7) 4 | 8) 1 | 9) 4 | 10) 4 |
| 11) 2 | 12) 1 | 13) 2 | 14) 1 | 15) 4 |
| 16) 2 | 17) 1 | 18) 2 | 19) 2 | 20) 4 |
| 21) 3 | 22) 1 | 23) 8 | 24) 7 | 25) 6 |
| 26) 1 | 27) 2 | | | |

28) குருவிகள் கூட்டை ஒரு பெரிய ஆலமரத்தின் கிளையில் கட்டின.

29) யானைக்கு சோர்வாக இருந்ததால் அது நிழலுக்காக ஆலமரத்தின் அடியில் நின்றது.

30) யானை தன் தும்பிக்கையை வைத்து மரத்தில் இருந்த கிளைகளை எல்லாம் ஒடித்துக் கீழே போட்டது.

31) கூடு இருந்த கிளை கீழே விழுந்ததால் அதில் இருந்த முட்டைகள் உடைந்தன.

32) பெண்குருவியின் அழுகையைக் கேட்ட ஆண்குருவி அதற்கு ஆறுதல் கூறியது.

| | | |
|---|---|---|
| 33) 3 | 34) 1 | 35) 2 |